©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 120] CHENNAI, MONDAY, APRIL 26, 2010
Chithirai 13, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், தஞ்சாவூர்.**

**தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், முள்ளங்குடி கிராம ஊராட்சித் தலைவர் பதவி நீக்கம் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க.எண் 5582/2008/அ3.)*

**No. VI(2)/153(d)/2010.**

தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் வட்டாரம், முள்ளங்குடி கிராம ஊராட்சி மன்றத் தலைவர் திரு. எம். மகேந்திரன் என்பவர் ஊராட்சி கணக்குகளில் நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் செய்து விதிகளை மீறி ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளது தொடர்பாக தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205–ன்படி, பதவி நீக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டு, 15–07–2009 தேதிய ***தமிழ்நாடு அரசிதழ்*** எண். 27–ல் பதவி நீக்க அறிவிக்கை வெளியிடப்பட்டது.

மேற்காணும் பதவி நீக்க அறிவிக்கையின் மீது 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205 உட்பிரிவு (12)–ன்படி அன்னாரால் அரசுக்கு மேல்முறையீடு செய்யப்பட்டு, அரசாணை (ப) எண் 29 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள்: 20–01–2010–ன்படி பதவி நீக்க ஆணை ரத்து செய்யப்பட்டு, உறுப்பினர்கள் கருத்து ஊராட்சி மன்றத்தலைவருக்கு ஆதரவாக இருக்கும் நிலையில் அதற்கு மாறாக ஊராட்சிகளின் ஆய்வாளர் ஊராட்சி மன்றத்தலைவரை பதவி நீக்கம் செய்ய முடிவு செய்யும்போது அதற்கான காரணத்தை தெரிவித்து, மறுவிளக்கம் கோரும் அறிவிப்பு வழங்கி பதவி நீக்கம் செய்ய அறிவுரைகள் வெளியிடப்பட்டது.

மேற்காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளின்படியும் 19–08–2009 தேதிய சென்னை உயர் நீதிமன்ற முழு ஆயத்தின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும் அன்னாருக்கு மறுவிளக்கம் கோரும் அறிவிப்பு வழங்கி விளக்கத்தினை பெற்று, நிதி முறைகேடு நிரூபணமாவதால் மறுவிளக்கம் ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில், அன்னாரை ஊராட்சி மன்றத்தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 262 (1)–ன்படியும் சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அரசு முதன்மை செயலர் அவர்களின் கடித ந.க.எண் 3205/ப.ரா.4/2010–1, நாள்: 01–03–2010 தேதிய அறிவுரைகளின்படியும் ***தமிழ்நாடு அரசிதழில்*** சிறப்பு வெளியீடாக வெளியிடப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

தஞ்சாவூர்,
**2010 ஏப்ரல் 22.**

**எம். எஸ். சண்முகம்,**
*மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—VI-2 Ex. (120)